# <u>கடலூர் பெருநகராட்சி</u>

**2019ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு இந்நகர்மன்ற இயல்புக் கூட்டம் கீழ்கண்ட பொருட்களை முடிவு செய்ய நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும்.**

நகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 29.08.2019

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
கடலூர் பெருநகராட்சி.

*பொருட்கள்*

| | |
|---|---|
| 1) | கடலூர் பெருநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்வதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 2006–ஆம் ஆண்டு முதற்கட்டமாக (phase I) மேற்கொள்ள திட்டமிடப்பட்டு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. இத்திட்டத்தினை செயல்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (D) எண். 397 MA3, நாள். 23.09.2005–ன் படி ரூ. 40.41 கோடி நிர்வாக அனுமதி பெறப்பட்டு பின்னர் ரூ. 65.14 கோடிக்கு திருத்திய நிர்வாக அனுமதியினை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (D) எண். 552 MA2, நாள். 30.12.2009–ன் படி பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி, பணி நிலவியல் தன்மைக்கு ஏற்ப பணியினை நான்கு சிப்பங்களாக வார்டு எண். 1, 2, 3(பகுதி), 4, 5, 10 (பகுதி), 11, 12(பகுதி), 14(பகுதி), 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25(பகுதி), 26(பகுதி), 27, 28(பகுதி), 29(பகுதி), 30, 31, 32, 33, 34, 35, 36, 39(பகுதி), 40, 41, 42 ,43 ,44 மற்றும் 45 –ல் பாதாள சாக்கடை அமைக்கும் பணியும், தேவணாம்பட்டினம் பகுதியில் 12.25 MLD கொள்ளளவு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமும் அமைக்கப்பட்டு தற்போது இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.<br>கடலூர் பெருநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தாமல் விடுபட்ட வார்டுகளாக 3(பகுதி), 6, 7, 8, 9, 10(பகுதி),12(பகுதி), 13, 14(பகுதி), 15,16, 25(பகுதி), 26(பகுதி), 28(பகுதி), 29(பகுதி), 37, 38, 39(பகுதி), ஆகிய வார்டுகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கையினை தனியார் கலந்தாலோசகரை நியமித்து தயார் செய்யவும், அதனை PDGF நிதி மூலம் செய்யவும், மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**(ந.க.எண். 2323/2006/இ3)** |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். |

| 2) | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலை அமைக்கும் பணி TURIP 2019–20–க்கான திட்ட அனுமதி வழங்கும் குழுவில் கடலூர் நகராட்சிக்கு சாலை பணிகளை மேற்கொள்ள கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. |
|---|---|

(ரூ.கோடியில்)

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை | தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு மானிய நிதி | மாநில நிதிக்குழு மானிய ஊக்க நிதி | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|---|---|
| கடலூர் | 3.00 | 1.38 | 0.90 | 0.42 | 0.30 |

எனவே மேற்காண் நிதி ஒதுக்கீட்டில் சாலை பணிகளை மேற்கொள்ள குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டு தொகைக்கு மன்றத்தின் அனுமதியும், மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம் |
|---|---|
| 3) | கடலூர் பெருநகராட்சி 2018–19ம் ஆண்டு முதல் 2020–2021 முடிய 3 ஆண்டுக் குத்தகை இனம் எண்–4 மஞ்சக்குப்பம் அறிஞர் அண்ணா தினசரி நாளங்காடியில் உட்புறம் உள்ள கடைகாரர்களிடம் கட்டணம் வசூலித்துக் கொள்ள 16.03.18, 23.03.18, 28.03.18, 05.04.18, 16.04.18, 15.06.18, 04.07.18, 20.07.18, 02.08.18, 07.12.18, 26.12.18, 04.01.19, 29.01.19, மற்றும் 11.02.19 ஆகிய தேதிகளில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் எவரும் ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை, ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை. இறுதியாக 31.07.2019 அன்று கீழ்கண்ட ஒருவர் மட்டும் ஏலத்தில் கலந்து கொண்டனர். ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை. |

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | ஏலம் கோரிய தொகை |
|---|---|---|
| 1 | திரு. திலிப்<br>த/பெ. பாபு<br>29, பகவதியம்மன் கோயில் தெரு,<br>வில்வநகர், கடலூர். | ரூ.12,000<br>(ரூபாய் பனிரெண்டாயிரம் மட்டும்) |

இறுதியாக 06.08.2019 அன்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதால் ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை. ஏலத்தில் கீழ்கண்டவாறு கலந்து கொண்டு அதற்கெதிரே குறிப்பிட்டவாறு ஏலம் கோரினார்கள் அதன் விபரம் பின்வருமாறு

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | ஏலம் கோரிய தொகை |
|---|---|---|
| 1 | திரு. திலிப்<br>த/பெ. பாபு<br>29, பகவதியம்மன் கோயில் தெரு,<br>வில்வநகர், கடலூர். | ரூ.48,000<br>(ரூபாய் நாற்பத்தெட்டாயிரம் மட்டும்) |
| 2 | திருமதி. பிரதீபா<br>க/பெ. சதீஷ்குமார்,<br>பகவதியம்மன் கோயில் தெரு,<br>வில்வநகர், கடலூர். | ரூ.48,500<br>(ரூபாய் நாற்பத்தெட்டாயிரம் மட்டும்) |

இக்குத்தகை இனம் கடந்த 2012–13ம் ஆண்டு முதல் ஏலம் 2017–18ம் ஆண்டு வரை ஏலம் போகவில்லை. 01.04.18 முதல் 31.10.18 வரை சராசரியாக நாள் ஒன்றுக்கு ரூ.102 (நூற்று இரண்டு மட்டும்) துறை மூலம் வசூல் செய்யப்பட்டுள்ளது. சாலையோர வியாபாரிகள் சாலையோரங்களில் ஆக்கரமிப்பு செய்து கடை வைத்து வியாபாரம் செய்வதால் போக்குவரத்து பதிக்கப்படுவதால் போக்குவரத்து காவல் துறையால் சாலையோர கடை அப்புறப்படுத்தப்பட்டது இதனால் அண்ணா மார்க்கெட் மற்றும் இதரப்பகுதிகள் சாலையோரத்தில் கடை வைத்து வியாபாரம் செய்யும் தரைக்கடைக்காரர்கள் தினசரி கட்டணம் செலுத்தவில்லை.

வ.எண் 2ல்கண்ட ஏலதாரர் உயர்ந்த பட்ச ஏலக் கேள்வியாக ரூ.48,500/– (ரூபாய் நாற்பத்தெட்டாயிரத்து ஐநூறு மட்டும்) கோரியுள்ளார். இத்தொகை அரசாங்க மதிப்பு ரூ.18,000த்தை விட 269 % கூடுதலாக உள்ளது கடந்த ஆண்டின் குத்தகை மதிப்பை விட கூடுதலாக உள்ளது.

எனவே இந்த உயர்ந்தபட்ச ஏலக் கேள்வியை ஏற்று குத்தகை உரிமத்தை வழங்கலாம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. அ) அனுமதிக்கலாம்

ஆ) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் முன் அனுமதி பெற்று நடவடிக்கை தொடரலாம்

4) கடலூர் பெருநகராட்சியில் பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு மற்றும் பொதுசுகாதாரப் பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், அலுவலக உதவியாளர்கள், நகரமைப்பு பிரிவு சங்கிலியாளர்கள், மகப்பேறு ஆயாக்கள், குழாய் சுத்தம் செய்பவர்கள் ஆகியோர்களுக்கு எதிர்வரும் 2019ம் ஆண்டிற்கான தீபாவளிப் பண்டிகையினை முன்னிட்டு சீருடைகள் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடம் பெற்றிடவும், சீருடைக்கான தையல்கூலி தொகை வழங்கவும், மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி உத்தேச செலவினமாக ரூ.10,00,000/– (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அ.கு. அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி தொகை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (6060/எச்1/2019)

5) கடலூர் பெருநகராட்சியில் 2015–16ம் ஆண்டு முதல் 2017–18 வரை 3 ஆண்டு குத்தகை இனங்கள் ஏலம் விடப்பட்டது. ஏலம் முடிவடைந்துவிட்டது. 2018–19ம் ஆண்டு முதல் 2020–21 வரை 3 ஆண்டுகளுக்கு மீளவும் ஏலம் விடப்பட்டு 2018–19ம் ஆண்டுக்கு ஏலம் விடப்பட்டு வசூலிக்கப்பட்டுள்ளது. கலம் எண்.5ல் உள்ளவாறு கீழ்கண்ட விபரப்படி கேட்பு எழுப்பட்டுள்ளது.

| வ. எண் | குத்தகை இனம் பெயர் | 2017–18 பழைய குத்தகை விபரம் | | | 2018–19 புதிய குத்தகை விபரம் | |
|---|---|---|---|---|---|---|
| | | கணினியில் கேட்பு வரிவிதிப்பு எண் | குத்தகைதாரர்கள் பெயர் | குத்தகை தொகை | குத்தகைதாரர்கள் பெயர் மற்றும் வரிவிதிப்பு எண் | குத்தகை தொகை |
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | மஞ்சக்குப்பம் பாரதி ரோடு கட்டணக் கழிவறை | 093/2015013 | டி. செல்வமணி | 245968 | ராமலிங்கம் த/பெ. தங்கவேல் 093/2018914 | 172670 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | சுப்புராயலு பூங்கா கட்டணம் | 093/2015018 | இ. சண்முகப்பிரியா | 186322 | அலாவுதீன் 093/2018908 | 532224 |
| 3 | தேவனாம்பட்டினம் பூங்கா கட்டணம் | 093/2015019 | கே. அரிதாஸ் | 67253 | கே. அரிதாஸ் த/பெ. கோதண்டபாணி 093/2018905 | 92000 |
| 4 | நகராட்சி எல்லை முழுவதும் வாகனம் மூலம் விற்பனை செய்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்தல் | 093/2015020 | இ. சண்முகப்பிரியா | 199552 | ஷோபனா க/பெ. லோகநாதன் 093/2018911 | 109760 |
| | | | மொத்தம் | 699095 | | 906654 |

எனவே 2017–18ம் ஆண்டுக்கான கேட்பு மீண்டும் 2018–19ம் ஆண்டுக்கு ரூ.699095 (ரூபாய் ஆறு இலட்சத்து தொண்ணுாற்று ஒன்பதாயிரத்து தொண்ணுாற்று ஐந்து மட்டும்) நடப்பு கேட்பாக எழுப்பப்பட்டுள்ளது. எனவே, 2018–19ம் ஆண்டுக்கு ஏலம் விடப்பட்டு ரூ.906654 (ரூபாய் ஒன்பது இலட்சத்து ஆறாயிரத்து அறநூற்று ஐம்பத்தி நான்கு மட்டும்) வ.எண் 5 மற்றும் 6ல் கண்ட விபரப்படி கேட்பு எழுப்பப்பட்டது எனவே கலம் எண்4ல் உள்ள நான்கு இனத்திற்கு கேட்புத் தொகை ரூ.699095/– (ரூபாய் ஆறு இலட்சத்து தொண்ணுாற்று ஒன்பதாயிரத்து தொண்ணுற்று ஐந்து மட்டும்) கேட்பினை நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.** அனுமதிக்கலாம். (ந.க.எண் 5851/18/அ2)

**6)** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் துறையின் 03.07.2007 தேதிய அரசாணை நிலை எண் 92ன் படி கடலூர் பெருநகராட்சிக்கு சொந்தமமன 9 ஆண்டுகள் முடிவடைந்த அனைத்து கடைகளுக்கும் சந்தை மதிப்பின் அடிப்படையில் வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்டது.

மறு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையை வசூலிக்கவும் இதர செலவினத்திற்கு இந்நகர் மன்றம் 31.07.2018 தேதிய தீ.எண்2238 ல் அனுமதிக்கப்பட்டது.

கடை வாடகை செலுத்தாத கடைகளுக்கு பூட்டி சீல் வைக்கும் பொழுது இந்நிகழ்வினை பதிவு செய்ய வீடியோ எடுக்க 21.06.19ல் விலைப்புள்ளி கோரப்பட்டது. விலைப்புள்ளி பெறப்படவில்லை. இறுதியாக 19.07.2019 அன்று வழங்கப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | BOSCO studio & HD videos<br>Nellikuppam Main Road Semandalam, Cuddalore. | ஒரு மணி நேரத்திற்கு ரூ.700 (ரூபாய் எழுநூறு மட்டும்) |

| | | |
|---|---|---|
| 2 | SUN Digital Studio and Video<br>112/38-A Main Road,<br>Pudupalayam.<br>Cuddalore. | ரூ.600 (ரூபாய் அறநூறு மட்டும்) |
| 3 | Raj Video Studio<br>116, Main Road,<br>Pudupalayam,<br>Cuddalore1. | ரூ.650 (ரூபாய் அறநூற்று ஐம்பது மட்டும்) |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளால் வ.எண் 2ல் கடை நிறுவனம் இதர நிறுவனங்களை விட வீடியோ எடுக்க ஒரு மணிக்கு ரூ.600 (ரூபாய் அறநூறு மட்டும்) குறைவாக சமர்பிக்கப்பட்டுள்ளதால் இவ்விலைப்புள்ளி ஏற்று பணி மேற்கொள்ளலாம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. அ) அனுமதிக்கலாம்
ஆ) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் முன் அனுமதி பெற்று நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் ஏற்கலாம். (14703/ 2016/ அ2)

7) கடலூர் பெருநகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க. எண் 25580/2015/பி3 நாள் 07.01.2016 எண்ணிட்ட கடிதத்தில் 3 வருடங்களுக்கு தனியார் ஒப்பந்ததாரர் மூலம் 107 துப்புரவு பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி தனியார் நிறுவனம் எஸ்.வி.டி. கன்ஸ்ட்ரக்ஷன், கடலூர் மூலம் 01.03.2017 முதல் 28.02.2018 வரை ஒப்பந்த அடிப்படையில் பணி செய்யப்பட்டது. மேலும் 2018–19 ம் ஆண்டுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர தேர்தல் தடையுள்ளதால், அதுவரை அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தீர்மானம் 2459 நாள் 28.02.2019ன்படி 01.04.2019 முதல் 31.08.2019 வரை நீட்டிப்பு 5 மாதங்களுக்கு துப்புரவு பணி மேற்கொள்ள ஒப்புதல் வழங்கியுள்ளது.

மேலும் 2019–2020ம் ஆண்டிற்கான ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப்பட்டு, துப்புரவு பணி மேற்கொள்ளும் பணி உத்தரவு வழங்கும் வரை ஏற்கனவே பணி செய்த எஸ்.வி.டி. கன்ஸ்ட்ரக்ஷன், கடலூர் என்ற தனியார் நிறுவனத்திற்கு 01.09.2019 முதல 31.10.2019 முடிய 2 இரண்டு மாதங்களுக்கு துப்புரவு பணி மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம். இதற்கான செலவினம் வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
(ந.க. எண் 10570/எச்1 15)

8) இந்நகராட்சியில் பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் அசோக் லைலேண்ட் காம்பாக்டர் TN 31 B 9025 என்ற லாரியின் 6 டயர்கள் (பழுது நீக்கம்) (புதியதாக வாங்கிட சுகாதார ஆய்வர் (ம) வாகன பொறுப்பாளர் குறிப்பின்படி ரூ.1.20 லட்சம் (ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) மதிப்பில் ஒப்பந்ததாரர் மூலம் வாங்கிட மன்றம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
அதன்படி வரப்பட்ட விலைப்புள்ளிகள்

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு.டி.சேஷாத்திரி, கடலூர் | 127100/– |
| 2 | திரு.கே.மாரிமுத்து, கடலூர் | 119900/– |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண் 2ல் காணும் விலைப்புள்ளி குறைவானதை ஏற்று மேற்படி டயர் விநியோகம் செய்ய திரு.கே.மாரிமுத்து, ஒப்பந்த பணி வழங்கிட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம். (5687/ எச் 1/ 19)

**9)** கடலூர் பெருநகராட்சி கம்மியம்பேட்டை பகுதியில் உள்ள எரிவாயு தகன மேடையில் ஏற்கனவே பழுதடைந்துள்ள விறகு மூலம் எரியூட்டும் இயந்திர அமைப்பினை அப்புறப்படுத்தி இயற்கை எரிவாயு மூலம் இயங்கும் புதிய இயந்திர அமைப்பினை அமைக்கும் பணி ரூ. 9.93 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 28.06.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | M/s. MHT Engineering, Chennai. | 0.26% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | M/s. YES YES JEE Engineering, Chennai. | 2.10% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட M/s. MHT Engineering, Chennai, என்ற நிறுவனம் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (மதிப்பீட்டை விட 0.26 % குறைவு ) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான M/s. MHT Engineering, Chennai என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர்/தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர்/தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**10)** கடலூர் பெருநகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ்(2018–19) Bio - Mining முறையில் பச்சையங்குப்பம் மற்றும் கம்மியம்பேட்டை உரக்குடில்களில் உள்ள குப்பைகளை அகற்றும் பணி மேற்கொள்ள ரூ. 671.00 இலட்சத்திற்கு 13.08.2018ந் தேதிய 7வது மாநில உயர்மட்டக் குழு (SHPC)–ன் கூட்ட நடவடிக்கைகளின்படி கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு. நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

**<u>அட்டவணை – 1</u>**

( ரூ. இலட்சத்தில்)

| மத்திய அரசு பங்குத் தொகை ( GOI share 35 %) | மாநில அரசு பங்குத் தொகை ( State share 55 %) | நகராட்சி பங்குத் தொகை ( ULB share 10% ) | திட்ட மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| 235.00 | 369.00 | 67.00 | 671.00 |

மேற்கண்ட பணிக்கு மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்ட 27.06.2019 அன்று 1. M/s. Zigma Global Environ Solutions Pvt Ltd, Erode. 2. M/s. Vidarbha Waste Management Pvt Ltd, Jaipur. & 3. M/s. Shree Bommu Industries, Coimbatore ஆகிய மூன்று நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கான தொழில்நுட்ப தகுதி கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த M/s. Zigma Global Environ Solutions Pvt Ltd, Erode. என்ற நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தபுள்ளி மட்டுமே தகுதியானதாக உள்ளது என ஒப்பந்தக்குழு கூட்டத்தில் 28.06.2019 அன்று முடிவு செய்யப்பட்டது. மேற்கண்ட பணிக்கான விலைத்தொகுப்பு 08.07.2019 அன்று திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் குறிப்பிடப்பட்டிருந்தது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1. | M/s. Zigma Global Environ Solutions Pvt Ltd, Erode. | 671.00 | 3.60 % மதிப்பீட்டை விட அதிகம் |

மேலே பட்டியலில் கண்ட பணிக்கு அளிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டை விட கூடுதலாக இருந்ததால் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Zigma Global Environ Solutions Pvt Ltd, Erode. நிறுவனத்திடம் விலைகுறைப்பு செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டதில், ஒப்பந்ப்புள்ளி விலைவிகிதம் குறைத்து தர இயலாது என்று 08.07.2019 அன்று கடிதம் அளித்துள்ளனர்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | விலை குறைப்பிற்கு டிதத்திற்கு பின் விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | M/s. Zigma Global Environ Solutions Pvt Ltd, Erode. , | 671.00 | 3.60 % மதிப்பீட்டை விட அதிகம் | 3.60 % மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புதல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பொறியியல் கையேடு அத்தியாயம் II , பத்தி, 2.7.2ல் முதல் அழைப்பில் 5 % மதிப்பீட்டிற்கு கூடுதலான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்தால் அந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் 3.60% மதிப்பீட்டை விட அதிகமாக அளித்துள்ள M/s. Zigma Global Environ Solutions Pvt Ltd, Erode. ,நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

11) கடலூர் பெருநகராட்சி கடற்கரை சாலையில் பாபு கலையரங்கம் எதிரே அமைந்துள்ள நகராட்சி மேல்நிலைப்பள்ளியின் கிழக்கு புறம் உள்ள சுற்றுச் சுவர் கடந்த 18.07.2019 அன்று பெய்த மழையின் காரணமாகவும், இச்சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டு பத்தாண்டுகளுக்கும் மேலாவதாலும் 100 மீட்டர் நீளத்திற்கு முற்றிலும் இடிந்து விழும் நிலையில் உள்ளதால், மாணவர்களின் நலன் கருதி உடன் இச்சுற்றுச்சுவரை இடித்து புதியதாக சுற்றுச் சுவரை அமைக்கும் பணி ரூ. 9,25,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் / ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம்

**12)** கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 24 நவநீதம் நகர் பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள இரண்டு கான்கீரீட் சிறுபாலங்கள் பழுதடைந்துள்ளதால் மழைக்காலங்களில் மழைநீர் வெளியேற முடியாமல் அப்பகுதியில் தேங்கி பொதுமக்களுக்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்துகிறது. மேற்படி பகுதியில் புதியதாக இரண்டு சிறுபாலங்கள் அமைக்கும் பணி ரூ.1,15,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் / ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம்

**13)** கடலூர் பெருநகராட்சி கடற்கரை சாலையில் பாபு கலையரங்கம் எதிரே அமைந்துள்ள நகராட்சி மேல்நிலைப்பள்ளியின் கிழக்கு புறம் உள்ள சுற்றுச் சுவர் இடித்து புதியதாக சுற்றுச் சுவரை அமைக்கும் பணி ரூ.9.25 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 07.08.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு.K.மாரிமுத்து, கடலூர். | 0.06% மதிப்பீட்டைவிட குறைவு. |
| 2. | திரு.P.பற்குணன், கடலூர். | 1.18% மதிப்பீட்டைவிட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு.K.மாரிமுத்து, கடலூர். என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி ( 0.06% மதிப்பீட்டைவிட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.K.மாரிமுத்து, கடலூர். என்ற ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர்/தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**14)** கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 24 நவநீதம் நகர் பகுதியில் புதியதாக இரண்டு சிறுபாலங்கள் அமைக்கும் பணி ரூ.1.15 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 07.08.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு.S. கிருஷ்ணமூர்த்தி, பாகூர் | 0.06% மதிப்பீட்டைவிட குறைவு. |
| 2. | திரு.P.பற்குணன், கடலூர். | 1.18% மதிப்பீட்டைவிட அதிகம். |

| | |
|---|---|
| | மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு.S. கிருஷ்ணமூர்த்தி, பாகூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.06% மதிப்பீட்டைவிட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.S. கிருஷ்ணமூர்த்தி, பாகூர் என்ற ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர்/தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| 15) | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண் 17731/ 2019/ பி3 நாள் 14.08.2019ல் தெரிவித்துள்ளதற்கிணங்க, கடலூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண் 23 கம்மியம்பேட்டை மற்றும் வார்டு எண் 45 பச்சையாங்குப்பம் ஆகிய உரக்குடங்குகளில் நிலத்தடி நீர் பகுப்பாய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க ஆகும் கட்டணம் ரூ.9200/– தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு வங்கி வரைவோலையாக செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | 1.மன்றம் அனுமதிக்கலாம்<br>2.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி கட்டணம் ரூ.9200/– செலுத்தியதற்கும், நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| 16) | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட தேவனாம்பட்டினம் பகுதியில் செயல்படுத்தப்பட்டு வரும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் கழிவு நீரின் தரம் குறித்து ஆய்வு மேற்கொண்டு அதன் அறிக்கை சமர்ப்பித்ததற்கு நிலுவை மற்றும் தற்போதைய பகுப்பாய்வு கட்டணம் ரூ. 19,560/–ஐ தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டும் என கடிதம் வரப்பெற்றுள்ளது. அதன்படி மேற்கண்ட தொகையை தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்தவும், இச்செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.11524 /2014/இ3) |
| 17) | கடலூர் பெருநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் பாதாள சாக்கடை திட்டத்திற்கு Consent to operation fees 2019 – 2020 ஆண்டு வரை ரூ. 6,06,640/–ஐ தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டும் என கடிதம் வரப்பெற்றுள்ளது. அதன்படி மேற்கண்ட தொகையை தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்தவும், இச்செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.11524 /2014/இ3) |
| 18) | கடலூர் பெருநகராட்சி, கேப்பர் மலை தலைமை நீரேற்று நிலையத்தில் ஆழ்துளை கிணறு எண்.18 அருகில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து புதிய 25 குதிரைத்திறன் நீர்மூழ்கி மோட்டார் உபகரணங்களுடன் அமைக்கும் பணிக்கு ஆகும் தோராய செலவீனம் ரூ. 12.,00,000/–க்கு மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து |

மேற்கொள்ளவும் மன்றஅனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இப்பணியின் அவசர அவசியம் கருதி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். மாநில பேரிடர் நிதி பெறப்படும் பட்சத்தில் இச்செலவினத்தை ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**19)** கடலூர் பெருநகராட்சி, கேப்பர் மலை தலைமை நீரேற்று நிலையத்தில் ஆழ்துளை கிணறு எண்.11 அருகில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து புதிய 25 குதிரைத்திறன் நீர்மூழ்கி மோட்டார் உபகரணங்களுடன் அமைக்கும் பணிக்கு ஆகும் தோராய செலவீனம் ரூ. 12.,00,000/–க்கு மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றஅனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இப்பணியின் அவசர அவசியம் கருதி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம், மாநில பேரிடர் நிறுவண நிதி பெறப்படும் பட்சத்தில் இச்செலவினத்தை ஈடுசெய்யவும் அனுமதிக்கலாம்

**20)** கடலூர் பெருநகராட்சி, கேப்பர் மலை தலைமை நீரேற்று நிலையத்தில் ஆழ்துளை கிணறு எண்.18 அருகில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து புதிய 25 குதிரைத்திறன் நீர்மூழ்கி மோட்டார் உபகரணங்களுடன் அமைக்கும் பணியினை ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 14.06.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு.K. மாரிமுத்து ,கடலூர் | 0.09% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு.T. சேஷாத்திரி ,கடலூர் | 0.60% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு.K. மாரிமுத்து ,கடலூர் என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.09% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு திரு.K. மாரிமுத்து, கடலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** 1.மன்றம் அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்: 3952 / 2019 / இ2)

**21)** கடலூர் பெருநகராட்சி, கேப்பர் மலை தலைமை நீரேற்று நிலையத்தில் ஆழ்துளை கிணறு எண்.24 அருகில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து புதிய 25 குதிரைத்திறன் நீர்மூழ்கி மோட்டார் உபகரணங்களுடன் அமைக்கும் பணியினை ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 14.06.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளி

| | |
|---|---|
| | பெறப்பட்டதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது. |

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு .S. கிருஷ்ணமூர்த்தி, கடலூர். | 0.10% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு .V. சுரேஷ் பாபு, கடலூர். | 0.86% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு .S. கிருஷ்ணமூர்த்தி, கடலூர். என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.10% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு . திரு .S. கிருஷ்ணமூர்த்தி, கடலூர். என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** **1.**மன்றம் அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்:3952/ 2019 / இ2)

**22)** கடலூர் பெருநகராட்சி, கேப்பர் மலை தலைமை நீரேற்று நிலையத்தில் ஆழ்துளை கிணறு எண்.11 அருகில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து புதிய 25 குதிரைத்திறன் நீர்மூழ்கி மோட்டார் உபகரணங்களுடன் அமைக்கும் பணியினை ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 14.06.2019ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்ட விவரப்படி உள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திரு .V. சுரேஷ் பாபு, கடலூர். | 0.07% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | திரு .S. கிருஷ்ணமூர்த்தி, கடலூர். | 0.60% மதிப்பீட்டை விட அதிகம். |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திரு .V. சுரேஷ் பாபு, கடலூர்.என்ற ஒப்பந்ததாரர் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.07% மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு .V. சுரேஷ் பாபு, கடலூர். என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** **1.**மன்றம் அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்: 3952 / 2019 / இ2)

| | |
|---|---|
| 23) | கடலூர் பெருநகராட்சி, கேப்பர் மலை தலைமை நீரேற்று நிலையத்தில் ஆழ்துளை கிணறு எண்.24 அருகில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து புதிய 25 குதிரைத்திறன் நீர்மூழ்கி மோட்டார் உபகரணங்களுடன் அமைக்கும் பணிக்கு ஆகும் தோராய செலவீனம் ரூ. 12.,00,000/– க்கு மன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றஅனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. இப்பணியின் அவசர அவசியம் கருதி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம், மாநில பேரிடர் நிறுவண நிதி பெறப்படும் பட்சத்தில் இச்செலவினத்தை ஈடுசெய்யவும் அனுமதிக்கலாம் |
| 24) | இந்நகராட்சியில் கணினி அறையில் பழுதாகி விடப்பட்ட 3 எண்ணிக்கை கணினி, 4 எண்ணிக்கை மானிடர் மற்றும் 10 எண்ணிக்கை கீபோர்டு (ம) மவுஸ் போன்ற கணினி மற்றும் கணினி சார்ந்த சாதனங்கள் பழுது நீக்கம் செய்து தயார் செய்வதற்கு உண்டான செலவினம் ரூ.49,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. இதற்குண்டான செலவினத்தை பொது நிதியில் செலவு செய்து கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | அவசர அவசியம் கருதி UTIS Phase II Module implementation செய்வதற்கு கணினி செய்ய வேண்டியுள்ளதால், மேற்கண்ட பணிக்கு விலைப்புள்ளி கோரி பணியை தொடர அனுமதி வழங்கலாம். |
| 25) | கடலூர் பெருநகராட்சியில் பொதுசுகாதாரப் பிரிவில் சுகாதாரப் பணிகள் நகர் முழுவதும் மேற்கொள்ளவும், 2019–2020ம் ஆண்டிற்கான சுகாதாரப் பெருட்கள் பினாயில், பிளிச்சிங் பவுடர் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் தேவைப்படுவதால், வரும் மழைக்காலங்களில் டெங்கு, மலேரியா, நோய்தடுப்பு முன்னெச்சரிக்கையாக இருப்பு வைக்கவும், மேற்கண்ட சுகாதார பொருட்கள் வாங்கிட தோராய செலவினமாக ரூ.4,00,000/– (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) செலவினம் பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | பொதுசுகாதாரம் அவசியம் அவசரம் கருதி மேற்கண்ட செலவினம் அனுமதிக்கலாம்.<br>(நக 6512/ எச் 1/ 19) |

நகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 29.08.2019

தனி அலுவலர் (ம) ஆணையாளர் (பொ)
கடலூர் பெருநகராட்சி.